

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.1.2025) சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற உணவுத் திருவிழா 2024 –ன் வெற்றிக்கு செயலாற்றிய சுய உதவிக் குழுக்கள், அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி க.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.1.2025) சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற உணவுத் திருவிழா 2024 குறித்த "Flavours of Fortune என்ற புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி .திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உடனிருந்தனர்.

## 180 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.15 கோடி வங்கிக்கடன் இணைப்பு!

# ‘சென்னை உணவுத் திருவிழா’வை வெற்றிபெறச் செய்த, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்குப் பரிசுகள்- பாராட்டுச் சான்றிதழ்கள்!

## சென்னை விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

**சென்னை,ஜன.10–**

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், நடைபெற்ற `சென்னை உணவுத் திருவிழா’வை வெற்றி பெறச் செய்த, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் – பரிசுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது.**

இதில் கலந்துகொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டுச் சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கியதுடன், 180 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 2 ஆயிரம் பேருக்கு, 15 கோடி ரூபாய் அளவிலான வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்.

சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரிசுகளை வழங்கி, பாராட்டிப் பேசியதன் விவரம் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின் பேரில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக, சென்னையில் கடந்த மாதம் டிசம்பர் 20 – ஆம் தேதியிலிருந்து 24–ஆம் தேதி வரை நடத்தப்பட்ட உணவுத் திருவிழாவில், சிறப்பாக செயல்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த அருமை சகோதரிகளுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவிப்பதில் நாங்கள் அனைவரும் பெருமை அடைகிறோம். மகிழ்ச்சி அடைகிறோம்.

### வங்கிக்கடன் இணைப்பு

இங்கு வருகை தந்துள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 2,000 மகளிருக்கு 15 கோடி அளவில் வங்கிக்கடன் இணைப்பையும் வழங்க இருக்கிறோம். அதற்கும் என் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் அரசுத்துறைக்கும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் நடைபெற்ற உணவுத் திருவிழாவில் கிட்டத்தட்ட 300 சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் பங்கேற்று உணவுப் பொருட்களைத் தயார் செய்து விற்பனை செய்துள்ளீர்கள். சமையல் என்பது அவ்வளவு சாதாரணமான விஷயம் அல்ல. ஒரு குடும்பத்துக்கு சமையல் செய்வதே பெரிய விஷயம். நீங்கள் மூன்றரை லட்சம் குடும்பத்தினருக்கு சமையல் செய்து கொடுத்துள்ளீர்கள்.

பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று, உணவினை வாங்கிச் சென்று ருசிப்பதை நாங்கள் அனைவரும் கண்கூடாகப் பார்த்தோம். மெரினாவில் வருகின்ற அந்தக் கடல் அலையை விட உணவுத் திருவிழாவிற்கு வருகின்ற மக்கள் தலைகளே அதிகமாக இருந்தன என்பதை, சென்னை மக்கள் அனைவரும் பார்த்தார்கள்.

### அன்போடு கொடுத்தார்கள்

இங்கு நம் ஊரக வளர்ச்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார். என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுக்கும் பொழுது, வருவேனா என்று தெரியவில்லை, இது சிறிய நிகழ்ச்சி என்று. இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்தேன். நான் மட்டும் வரவில்லை. இங்கு இருக்கின்ற அமைச்சர் சேகர்பாபு அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் அத்தனை பேரும் வந்து இந்த நிகழ்ச்சியைப் பெரிதாகி விட்டார்கள் என்று சொன்னார். அவர் ஒன்றை சொல்லத் தவறிவிட்டார். நாங்கள் இங்கு வர மட்டுமில்லை. இங்கு வந்து எல்லாவற்றையும் சாப்பிட்டோம். அவர்கள் அன்போடு கொடுத்தார்கள் நாங்கள் ஒவ்வொன்றையும் ருசித்தோம்.



அனைத்துக் கடைகளிலும் உணவு சுவையாக இருந்தது. ஒவ்வொரு கடையிலும் நின்று, அவர்களுடன் பேசி சாப்பிட்டு விட்டுத்தான் சென்றோம்.

இதை வெறும் வார்த்தைக்காக சொல்லவில்லை. ஐந்து தினங்கள் மட்டுமே நடத்தப்பட்ட இந்த உணவுத் திருவிழாவிற்கு சுமார் மூன்று லட்சம் பேர் வருகை தந்து ஒரு கோடியே 55 லட்சம் ரூபாய் அளவிற்கு உணவுப் பொருட்களை வாங்கி சுவைத்திருக்கிறார்கள்.

### உணவு திருவிழா வெற்றி

பொதுமக்கள் அனைவரின் பாராட்டுகளையும் பெற்று மிகப் பெரிய அளவில் இந்த உணவு திருவிழா வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றி சுய உதவி குழுக்களை சேர்ந்த உங்கள் தன்னம்பிக்கைக்கும், உழைப்புக்கும் ஒற்றுமைக்கும் கிடைத்துள்ள ஒரு அங்கீகாரம். இந்த சாதனை உங்களால் மட்டுமே சாத்தியமாகும்.

இங்கு எனக்கு முன்பு பேசிய சகோதரி கிருஷ்ணகிரி மாவட்டம், சபரி முருகன் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த வளர்மதி அவர்கள் பல தடைகளைத் தாண்டி கடந்து வந்து தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டதாகக் கூறினார். நடந்து முடிந்த உணவுத் திருவிழாவில் `நோ ஆயில் நோ பாயில்’ என்ற கான்செப்டில் அவர் அமைத்திருந்த அரங்கின் மூலம் 82 ஆயிரம் ரூபாய் விற்பனை செய்து மிகப்பெரிய ஒரு சாதனையைச் சாதித்துள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்கா வளர்மதி போன்றோர் அவர்களின் குடும்பத்திற்கு மட்டும் ஆதாரமாக இல்லாமல், சமுதாயத்திற்கே முன்னுதாரணமாக திகழ்கிறார் என்று சொன்னால், அது மிகையல்ல. இங்கு வந்திருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் இந்தச் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

### வாழ்த்துக்களைக் கூறுகிறேன்

உணவுத் திருவிழாவில் கலந்து கொண்ட கடலூர் மாவட்டம், சுயஜோதி மகளிர் குழுவினர், நெல்லி ஊரல் வகைகளைத் தயாரித்து இன்றைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உயர்ந்துள்ளனர் என்பதை இங்கு பெருமையோடு கூற விரும்புகிறேன், அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உணவு திருவிழாவில், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த `சொர்ண வராகி அம்மன் சுய உதவிக்குழு’ கலந்து கொண்டது. இந்த குழுவானது இரண்டே வாரத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று இடங்களில் முட்டை மிட்டாய் கடைகளைத் திறந்துள்ளது. அவர்களின் தயாரிப்புகளுக்கு நமது உணவுத் திருவிழாவிலும் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது. அந்த குழுவுக்கும் நமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### 5 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய்

மேலும், நமது உணவுத் திருவிழாவில் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த குழுவினர், ஊட்டி ரோஸ் மகளிர் சுய உதவிக்குழுவினர் 5 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மட்டன் பிரியாணி உணவினைத் தயார் செய்து சாதனை படைத்து உள்ளார்கள். அந்தக் குழுவினருக்கும் நாம் அனைவரும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

மகளிரைத் தொழில் முனைவோர்களாக்கி அழகு பார்க்க வேண்டும் என்று உறுதியுடன் செயல்படுகின்ற அரசு, நம் முதலமைச்சரின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. உணவுத் திருவிழாவின் மூலம் பல்வேறு மகளிர் தொழில்முனைவோர்களை உருவாக்கி உள்ளது நம் கழக அரசு.

### பல்வேறு நலத் திட்டங்கள்

இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற அளவிற்கு ஏராளமான திட்டங்களை நம் அரசு செயல்படுத்தி வருகிறது. மகளிர் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியில் இந்திய அளவில், தமிழ்நாடு மிக மிக முக்கியமான இடத்தில் உள்ளது. அதனால் தான் நம் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு என்று பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்.

உதாரணத்திற்கு, சில திட்டங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நம் அரசு பொறுப்பேற்றவுடன் நம் அமைச்சர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயண திட்டம், கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டம் தான். ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் மூலம் மாதம் 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று கல்வி ஊக்கத் தொகையாக `புதுமைப்பெண் திட்டம்’ மூலம் வருடம் தரும் நான்கு லட்சம் பெண்கள் பயன் பெற்று வருகிறார்கள். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 20 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் பயன்பெற்று வருகிறார்கள். இதற்கெல்லாம் மகுடம் போல கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் வழங்கப்பட்டு இருக்கிறது.

### முக்கியத்துவம் கொடுக்கிறது

இந்த திட்டங்கள் எல்லாம் மகளிர் முன்னேற்றத்திற்கு அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதற்கு இந்தத் திட்டங்கள் ஒரு சின்ன சாட்சி. இங்கு கூட நம் 180 மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு ரூபாய் 15 கோடி அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்க இருக்கிறோம்.

எல்லோரும் எங்களுக்கு எங்கள் துறைக்கு நன்றி சொன்னார்கள். நாங்கள் எங்கள் முதலமைச்சருக்கு நன்றி சொல்ல வேண்டும். சென்னையில், இந்த உணவுத் திருவிழா நடைபெறப்போகிறது என்று தெரிந்தவுடன், உடனே என்னை அழைத்து ஒவ்வொரு நாளும் என்னென்ன ஏற்பாடு செய்து இருக்கிறீர்கள். என்னென்ன நடத்துகிறீர்கள், வந்திருக்கின்ற தாய்மார்கள் சகோதரிகள் எல்லாம் தங்குவதற்கு சரியான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா, அவர்களுக்கு உணவு வசதிகள் போக்குவரத்து வசதிகள் எல்லாம் சரியாக செய்யப்பட்டிருக்கிறதா, பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்து இருக்கிறீர்களா என்று அந்த அளவிற்கு ஒவ்வொரு நாளும் நம் அமைச்சர் அவர்கள் கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

உணவு திருவிழாவின் இந்த வெற்றிக்கு மிக மிக முக்கியமான காரணம் நம் முதலமைச்சர் என்பதை, நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

### சிறப்பாக ஒருங்கிணைப்பு

இந்த உணவுத் திருவிழாவில் ஒரு சிறிய அசம்பாவிதம்கூட இல்லாமல் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இந்த உணவுத் திருவிழா நடத்தப்பட்டுள்ளது. இதனை சிறப்பாக ஒருங்கிணைத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலர்கள் பங்கேற்ற மகளிர் சுய உதவிக்குழுக்கள் அத்தனை பேருக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மெரினாவில் நாள் முழுவதும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்ட காவல்துறையினருக்கும் மூன்றரை லட்சம் பேர் வந்து போனாலும், அந்த இடத்தை மிகத் தூய்மையாக சுத்தமாக பராமரித்த சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த உணவுத் திருவிழா இவ்வளவு சிறப்பாக வெற்றி பெற்றுள்ளது என்றால், அதற்கு முக்கிய காரணமான சென்னை மக்களுக்கும் எங்கள் நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் உணவுத் திருவிழாவை, இன்னும் பெரிதாக இன்னும் அதிக கடைகளுடன் இன்னும் பிரமாண்டமாக நடத்திட, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன்யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் சுய உதவி குழுவினர்களை சேர்ந்த அனைவரின் வெற்றி பயணம் ஒவ்வொரு ஆண்டும் தொடரட்டும் உங்களுக்கு திராவிட மாடல் அரசும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் என்றென்றைக்கும் துணை நிற்பார்கள் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகர மேயர் பிரியா, ஊரக வளர்ச்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திவ்யதர்ஷினி ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குனர் ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ், துணை மேயர் மகேஷ் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், நிவேதா ஜெசிக்கா, பகுதிச் செயலாளர் சுதாகர், மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் கிருஷ்ணகிரி மாவட்ட சபரி முருகன் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த வளர்மதி உள்பட சுய உதவிக்குழுவைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சர்வதேச, ஆசிய மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1,021 வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம் (இராமநாதபுரம்), அ.நல்லதம்பி (திருப்பத்தூர்), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அர்ஜுனா விருது பெற்ற டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரர் ஞா. சத்யன், அர்ஜுனா விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள பாராலிம்பிக்ஸ் பதக்க வீராங்கனை செல்வி. துளசிமதி முருகேசன் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழர் திருநாளாம், பொங்கல் திருநாளை முன்னிட்டு, நம் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, திருவல்லிக்கேணி பகுதி, 116 (அ) வட்டம், டாக்டர் பெசன்ட் தெரு, நரசிம்மன் தெரு, நரோஜி தெரு, வெங்கடாச்சலம் தெரு ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொங்கல் பரிசுப் பொருட்களும் – புத்தாடைகளும் வழங்கி வாழ்த்தி மகிழ்ந்தார்.